257

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதனஹூ புரட்டாசிமீ பகுதி கூ.
VOL. 2. SEPTEMBER & OCTOBER 1925. No. 9.

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை.

ஸ்ரீமதுபயவேதாந்தவித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி எழுதுவது.

(180-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆழ்வார்களும் பலவிடங்களில் தாங்கள் ப்ரபத்தியை அநுஷ்டித்திருப்பதும், பிறர்க்கு உபதேசித்திருப்பதும் கண்டுகொள்ளலாம். ஆசார்யர்களில் ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நத்தில் "நதர்மநிஷ்டோஸ்மிநசாத்மவேதீ" "அபராத ஸஹஸ்ரபாஜம்" என்னுந் தொடக்கமான சுலோகங்களாலும் தான் ப்ரபத்தியை அநுஷ்டித்திருப்பதைக் கண்டுகொள்ளலாம். அப்படியே எம்பெருமானாரும் 'கத்யத்தில்' ப்ரபத்தியை அருளிச்செய்திருக்கிறார். ஆழ்வான் 'வரதராஜஸ்தவத்தில்' ப்ரபத்தி விஷயமாக ப்ரஸ்தாபித்திருப்பதையும் அறியலாம். பட்டர், ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "உபாதத்தே ஸத்தாஸ்திதி" என்கிற சுலோகத்திலும், "தபரோஹம்" என்கிற சுலோகத்திலும் ப்ரபத்தியை அருளிச் செய்திருக்கிறார். தேசிகன் சாதித்தருளிய 'நிக்ஷேபரக்ஷையில்' ப்ரபத்தி உபாயமென்பதை நிரூபித்திருப்பதும், 'ந்யாஸதிலகம்' 'ந்யாஸவிம்சதி' முதலான கிரந்தங்களிலும் நிரூபித்திருப்பதும் பிரஸித்தம்.

தேசிகன் அருளிச்செய்த "ஆர்த்தேஷ்வாசுபலா" என்கிற சுலோகத்தாலும் ப்ரபத்தி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்த சுலோக

மாவது:— ஆர்த்தேஷ்வா சுபலா ததந்யவிஷயே ப்யுச்சிந்நதே ஹாந் தரா, வந்ஹ்பாதே ரநபேக்ஷணா ததநப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ, ஸ்ரீரங்கேசுவர யாவதாத்மநியத த்வத்பாரதந்த்ர்யோசித த்வய்யேவ த்வதுபாயதீ: அபிஹித ஸ்வோபாய பாவாஸ்துந:" என்பதாம்.

இதன் அர்த்தம், பக்தியானது ஆர்த்தியுள்ளவர்களுக்கும், த்ருப்தராயிருப்பவர்களுக்கும் ப்ராரப்தகர்மாவஸாநமானபோது மோக்ஷப்ரதாநத்துக்கு உபயுக்தமானது. பரபத்தி, ஆர்த்தவிஷயத்தில் உடனே பலத்தைக் கொடுப்பதாயும், த்ருப்த்த விஷயத்தில் ப்ராரப்ததேஹாவஸாநத்திலேயே பலத்தைக்கொடுப்பதாயுமிருப்பதால் அதிலும் சிறந்தது. அன்றியும் பக்தியானறு அக்நி வித்யாங்கக மாகையாலே த்ரைவர்ணயாதிகாரமுள்ளது. ப்ரபத்தி ஸத்யவசனுதிகள்போலே ஸர்வாதிகாரமாயுள்ளது. பக்தியானது எல்லாசேதநர்களுக்கும் நியதமாயுள்ள அநந்யசரணத்வரூபமான உபாயபாரதந்தர்யத்துக்கு அநுசிதையாகும். ப்ரபத்தி ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாகிறபடியால், அந்த உபாயபாரதந்த்ர்யத்துக்கு உசிதையாயிருக்கும். பக்தி ஈசுவரனுடைய உபாய பாவத்தை விஷயீகரிக்க மாட்டாது.ப்ரபத்தியோ ஈசுவரனையே உபாயமாகப்பற்றுகையாலும், "இயம் கேவல லக்ஷ்மீச" என்பது முதலிய சுலோகங்களின்படி உபாயவரணரூபமாயிருக்கையாலும் அநுபாயமாயிருக்கும். என்று சொல்லப்பட்டிருக்கிறது,

இப்படியே லோகதேசிகன், மணவாளமாமுநிகள் முதலான ஆசார்யர்களும் ப்ரபத்திநிரூபணத்தில் சிறந்தவர்களாயிருந்தார்களென்பது அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளால் விளங்கும். இன்னும் உபபத்தியாலும் நிரூபிக்கலாகும்.

ஒருவன் அசக்தனுயும், அஜ்ஞனுயும் ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாதவனுயுமிருந்தால் அவன், ஸமர்த்தனுயும், ப்ராப்தனுயும் உள்ள ஒருவனையடைந்து என்னை நீயே ரக்ஷிக்கவேணுமென்றுப் ப்ரார்த்தித்தால் அவன் அப்படியே ரக்ஷிக்கிறுன் என்பது லோகஸித்தம். இப்படி, கபோதோபாக்கியானத்திலும், ஸ்ரீ கெஜேந்த்ராழ்வான் வ்ருத்தாந்தத்திலும் நிகழ்ந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

கபோதத்துக்கு சரணாகதி பரமதர்மமென்கிற ஞானமுமில்லை; சரணாகதரக்ஷணம் பண்ணாவிடில் மிகுந்த பாதகமுண்டாகுமென்பதும் தெரியாது, அப்படியிருக்க, தன்னுடைய ப்ராணனை விட்டாவது தனக்கு சத்துருவான வேடனை ரக்ஷித்ததென்றால், ஜ்ஞானவான்கள் அநுஷ்டிப்பது சொல்லவேண்டாதாயிற்று. இந்த விஷயத்தை "கபோதோ வாநர ச்ரேஷ்டகிம்புநர்மத் விதோஜந:" என்று பெருமாளருளிச்செய்தார்.

இது நிற்க, பட்டர் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளும் போது நடுவே ஒரு வேடன் குடிசையில் தங்கியிருந்தஅளவே காட்டிலிருந்துவந்த வேடனைக்கண்டு இன்று நீ காட்டிற்கண்ட விசேஷமேதேனு முண்டோவென்று கேட்டருள, அதற்கு அவன் காட்டில் ஒரு ஆண் முயலைக்கண்டு அடிக்கபுகுந்தேன் அவ்வளவில் அதன் அன்புள்ள பெட்டைமுயல் என் முன்பாகவந்து கும்பிட்டுக் கிடந்தது; அது கண்டு இரங்கி அந்த முயலை அடிக்காமல் வந்தேன் என்று சொல்ல, இதைக்கேட்டு, பட்டர், அந்த முயலுக்கு சரணாகதி பரமதர்மமென்கிற ஜ்ஞாநமில்லை; அந்த வேடனுக்கும் சரணாகதரக்ஷணம் பரமதர்மமென்று தெரியாது. அப்படியிருக்க சரணாகதி தர்மத்தினுடைய ப்ரபாவம் இப்படிச் செய்வித்தது. ஆதலால் பரமசேதனனான ஸர்வேச்வரனிடத்தில் சேதனர்கள் பண்ணுகிற சரணாகதி பலியாதிராதென்பது கிம்புநர்ந்யாயஸித்தம் என்றருளிச் செய்தார்; என்பது ப்ரஸித்தம்.

இந்த ப்ரபத்தி பக்தியைக்காட்டிலும் மேலானது எப்படியென்றால், பக்தி அதிகிருதாதிகாரையாயிருக்கும். ப்ரபத்தி ஸர்வாதிகாரையாயிருப்பது. அந்த பக்திக்குப்பலம் ப்ராரப்தகர்மாவஸாநத்தில் மோக்ஷமடைதல். ப்ரபத்தியில் ஆர்த்தருக்கு உடனே மோக்ஷபலம் ஸித்திக்கிறது, த்ருப்தருக்கு ப்ராரப்தசரீராவஸாநத்திலேயே மோக்ஷபலம் ஸித்திக்கிறது. ப்ரபத்தியானது தன்னை யநுஷ்டிக்கிறவர்களுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் பலோபயோகியாயிருக்கும். பக்தி தன்னை அநுஷ்டிக்கிறவர்களுக்கு மட்டுமே பலத்தைக் கொடுக்கும்.

ஆனல்; "தமேவம் விதித்வா அதிம்ருத்யுமேதி" என்கிற சுருதியின்படி ஜ்ஞானமுள்ளவனுக்கே மோக்ஷம் என்று சொல்லப்பட்டிருப்பதால் ஜ்ஞானமில்லாமலிருக்கிற தத்ஸம்பந்திகளுக்கும் இது பல ஸாதநமாம்படி கூடுமோவென்னில், "தமேவம்விதித்வா" என்கிற சுருதியில் "நாந்ய: பந்தா வித்யதே அயநாய" என்று சொல்லுகிற இடத்தில் 'தமேவம்' என்பதிலுள்ள தத்சப்தார்த்தமான ஈசுவரனைக் காட்டிலும் அந்யமாயிருப்பதற்கு உபாயத்வமில்லை என்பதே தாத்பர்யமாகையால், ப்ரபத்திஸ்தலத்தில் ததந்யமானஜ்ஞானம் உபாயமாகாமையாலே ஆசார்யனுடைய ப்ரபத்தியாலேயே தத்ஸம்பந்திகளுக்கு மோக்ஷமுண்டாகு மென்பதில்விரோதமில்லை. என்று 'ஸாரப்ரகாசிகையிலும்' 'நிக்ஷேபரக்ஷை' யிலும் நிரூபிக்கப்பட்டிருப்பதால் ப்ரபத்தி ஸ்தலத்தில் ஜ்ஞானத்துக்கும் பலத்துக்கும் ஸாமாநாதிகரண்யம் வேண்டியதில்லை. இப்படியே 'ந்யாய ஸித்தாஞ்ஜந' வ்யாக்கியானத்தில் திருப்புட்குழி ஸ்வாமி, "அந்யஸ்ய ஜ்ஞாநாத் அந்யஸ்ய முக்தி" கூடாதென்பது ப்ரபத்தியொழிந்த விடத்திலென்று நிரூபித்திருக்கிறார்.

அன்றியும், "அங்வபா தபிசைகல்ப ஸௌஜந்யா தாத்மநோ ஹரேள ஸர்வயேவ ப்ரமுச்யந்தே நரா:பூர்வே அபரேததா" என்று பாரத்வாஜஸம்ஹிதையிலும் "பசுர் மநுஷ்ய: பக்ஷீவா" என்கிற சுலோகத்திலும், இந்த விஷயம் வ்யக்தமாயுள்ளது. இதை அநுஸரித்து சுருதப்ரகாசிகையில் "விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே" என்பதன் வ்யாக்கியாநவஸரத்தில் "தத்ஸம்பந்திநோபி ததயேவ ரக்ஷ்யா:" என்று சாதித்து, "ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா: வைஷ்ணவோந: குலேஜாத: ஸநஸ் ஸந்தாரயிஷ்யதி" என்று இந்த ப்ரமாணமும் காட்டப்பட்டிருக்கிறது. 'இங்குக் காட்டிய ப்ரமாணங்களின் அர்த்தம்—ஒருவன் ஸர்வேசுவரனிடத்தில் ஆத்மாத்மீய பரந்யாஸம் பண்ணியிருந்தானேயானல் அவனுடைய ஸம்பந்தத்தாலே அவனுக்கு முன்புள்ளவர்களும், பின்புள்ளவர்களும் முக்தராவர்கள். பசு, மநுஷ்யன், பக்ஷி இவர்களும் வைஷ்ணவஸம்சிரயமுள்ளவர்களாயிருந்தால் அந்த வைஷ்ணவசம்சிரயத்தாலே முக்தி அடைகிறார்கள். ஒரு குலத்தில் வைஷ்ணவனை ஒரு

வன் பிறந்தானேயானுல் அவனுடைய பித்ரு பிதாமஹ ப்ரபிதா மஹர்கள் நம்முடைய குலத்தில் ஒரு வைஷ்ணவன் பிறந்திருப்ப தால் அவன் நம்மை ஸம்ஸாரத்தில் நின்று கரையேற்றிவிடுவன், என்று ஸந்தோஷத்தாலே கூத்தாடுகிறுர்கள் என்பதாம். இப்படி ப்ரமாணங்களிருப்பதால் ப்ரபத்தியானது தன்னை அநுஷ்டிக்கிறவர்களுடைய ஸம்பந்தஸம்பந்திகளுக்கும் பலஸாதநமா மென்பது ஸித்தம். இது நிற்க,

பக்தி நிஷ்டனுக்கு சரீரவியோக காலத்தில் அந்திமஸ்ம்ருதி வேணும்; அது இல்லாத பக்ஷத்தில் அவனுக்கு பலமில்லை. ப்ரபத்திக்கு சரீராவஸாநத்தில் அந்திமஸ்மிருதி இல்லாமலிருந்தபோதிலும் பலத்துக்குக் கண்ணழிவில்லை. ஆனுல் ஸரீராவஸாந காலத்தில் "வாக்மநஸ் ஸம்பத்யதே" என்கிறபடியே வாகிந்திரியமானது மனஸ்ஸில் ஸம்பந்திக்க, அந்த மனஸ்ஸானது ப்ராணன்களில் ஸம்பந்திக்கும் என்று ஏற்படுவதால் ப்ராணன்களில் ஸம்பந்திக்கிறதற்கு முந்தி மனஸ்ஸுக்கு உபரதியில்லாமையால் எந்தவிஷயத்திலாவது ஸ்மிருதி அவசியம் இருக்கும். அப்போது "யம்யம்வாமி ஸ்மரன்" என்கிற ப்ரமாணப்படி எதை விஷயீகரித்து ஸ்மிருதியுண்டாகிறதோ அந்த ஜன்மாவே இவனுக்கு ஏற்படுகிறதென்றிருப்பதால் ப்ரபந்நனுக்கும் அப்படியான அந்திமஸ்மிருதி அவசியம் வேண்டி இருப்பதால் அதில்லாதபோது மோக்ஷம் ஏற்படாதென்னில், அது ஸாமாந்ய விஷயமாகையால் ப்ரபந்ந விஷயத்தில் பொருந்தாது. ஏனெனில் இவனுக்கு ப்ரவ்ருத்தியின் நிவ்ருத்தி யுண்டாயிருப்பதாலும். ஸித்தமே உபாயமாக முன்னிற்பதாலும் இதர விஷயஸ்ம்ருதி யுண்டாக மாட்டாது. த்வயாநுஸந்தானவாசனையால் பகவத்விஷயமான ஸ்மருதியுண்டாகலாம். ஆனுல், அது பலரூபமாயிருப்பதல்லது ஸாதன கோடியிற் சேராதாகையால் அந்திமஸ்மஸ்மிருதி சாதநத்வேந அவசியம் வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. "மாதவாங்க்ரி த்வயோபாயோ மாதவாங்க்ரி ப்ரயோஜந: ஸஉத்தமாதிகாரீ ஸ்யாத்" என்பதனுல், எம்பெருமானுடைய திருவடிகளை உபாயமாகவும் உபேயமாகவும் நினைத்திருப்பவன் உத்தமாதிகாரி என்று சொல்லியிருப்பதாலும், அஸ்மிந் நிவர்த்தமாநாநாம் விதௌ விப்ர நிஷேவிதே பூர்

வேத்ரய உபாயாஸ்தே பவேயுர மனோஹரா:" என்கிற சுலோகத்தில், விசேஷஜ்ஞர்களால் ஸேவிக்கப்பட்டிருக்கிற ப்ரபத்தி நிஷ்டையில் இருக்கிறவர்களுக்கு முந்தின கர்மஜ்ஞான பக்திகள் மூன்றும் அமனோஹரங்கள் என்று சொல்லியிருப்பதாலும், "ஸத்கர்ம நிரதா: சுத்தா: ஸ்வயத்ந க்ருத புத்தய: நார்ஹந்தி சரணஸ் தஸ்ய கலாம் கோடித மீமபி" என்பதனல் மற்ற உபாயாந்தர நிஷ்டர்கள் சரணுகதனுடைய கோடியில் ஓர் அம்சத்துக்கும் அர்ஹராகார் என்று சொல்லப்பட்டிருப்பதனுலும் ப்ரபத்தி மேலானதே.

மேலும், "நரஸ்ய புத்தி தௌர்ப்பல்யாத் உபாயாந்தர மிஷ்யதே" என்கிற சுலோகத்தால், புத்தி தௌர்ப்பல்யமுள்ளவனுக்கு உபாயாந்தரத்தில் அதிகாரம் உண்டாகிறதென்று இருப்பதாலும் விசேஷஜ்ஞர்களுக்கே அதிகாரமுள்ள ப்ரபத்தி மேலானது. ஆனல் பக்தியோக நிஷ்டர்களான வ்யாஸாதிகளுக்கும் புத்திதௌர்ப்பல்யம் சொல்லவேண்டி யிருக்கிறபடியால் அந்த அர்த்தம் அநுபபந்நம். ஆகையாலேதான் அசக்தனுயிருந்தபோதிலும் உபாயாந்தரங்களில் துராசாதார்ட்ய மேற்பட்டு தனக்கு அதிகார மிருப்பதாக ப்ரமித்தவனுக்கு உபாயாந்தரங்களில் அதிகாரம் என்று அர்த்தம் சொல்லவேணுமென்னில், அப்போது தௌர்ப்பல்ய சப்தத்துக்கு லக்ஷணையும், அசக்தபதாத்யாஹாரமும் ஏற்படும். வ்யாஸாதிகளுக்கு புத்தி தௌர்ப்பல்யகல்ப்பனத்தை யபேக்ஷித்து லக்ஷணையும் அத்தியாஹாரமும் ஸஹ்யமென்று சொல்லில் ரதகாராதிகரணத்திலும், நிஷாதஸ்தபத்யதிகரணத்திலும் சப்தஸ்வாரஸ்யத்தை அவலம்பித்து ரதகாராதிகளுக்கு வித்யையைக் கல்ப்பித்திருப்பதுபோல் இங்கும் சப்தஸ்வாரஸ்யத்தை அவலம்பித்து வ்யாஸாதிகளுக்கும் அதிகாராரம்பககர்ம விசேஷத்தைக் கற்பித்து உபதேசத்துக்குறுப்பான ஜஞானமிருந்தபோதிலும் அநுஷ்டானேபயோகியான ஜ்ஞானமில்லையென்றே கொள்ளவேணும்.

அப்படியிருப்பதால்தான் ஆழ்வார்களுக்கு ஏற்பட்ட கௌரவ்யதை அவர்களுக்கில்லை. "தஸ்மை நமோ முநிவராய பராசராய" என்று ஆளவந்தார் அருளிச்செய்தது உபகாரக புத்தி நிபந்தனம்; உத்தாரக புத்தி க்ருதமன்று.

இத்தை அநுஸரித்து, வேதாந்தாசார்யர், "ப்ரபந்நா தந்யேஷாம் நதிசதிமுகுந்தோநிஜபதம்" என்று அருளிச்செய்தார். இப்படி

ப்ரமாணங்களும் உபபத்திகளுமிருப்பதால், "பக்தி முக்யோபாயம் ப்ரபத்திகௌணோபாயம் ப்ரபத்தி மேலானதென்று சொல்லியிருப்பது ப்ரரோசநார்த்தம்" என்று சொல்லுமது அநுபபந்நம்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஆத்மா.

சாஸ்த்ரங்கள் நான் என்ற சொல்லுக்கு எது அர்த்தமோ அதுவே ஆத்மாவென்றும், அதுதான் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமுடையதென்றும் கூறும். இதனால் ஜ்ஞாநாநந்தங்களைக் குணமாகவும், லக்ஷணமாகவுமுடைய வஸ்துவே ஆத்மாவென்பது பெறப்பட்டது. ஜ்ஞாநமாவது:— பொருளை உள்ளபடி அறிகை. ஆநந்தமாவது:— அநுகூலமாயிருக்கை. ஆத்மா ஜ்ஞாநம், ஆநந்தம் என்ற இரண்டையும் குணமாகவுடையவன் என்றதினால் 'இதையறிகிறேன்' 'இதையநுபவிக்கிறேன்' என்று அறிதற்கும் அநுபவித்தற்கும் கர்த்தாவாகவும் போக்தாவாகவும் ஆகிறான். ஆகையால் ஒருகார்யத்தில் முயற்சிப்பதற்கும், அதனால்வருகிற பிரயோஜனத்தை அநுபவித்தற்கும் உரியனாகிறான். இப்படி தன்னதாகக்கொள்ளுகிற முயற்சியும், பிரயோஜனங்களும் *பாரதந்தர்ய ஜ்ஞாநத்தாலும், †சேஷத்வ ஜ்ஞாநத்தாலும் ஆத்மாவுக்கு ஒழிந்துபோம். இது

*பாரதந்தர்யமாவது:— பராதீனமாயிருக்கை. அஃதாவது இருத்தல், ஜீவித்தல், பிரயத்னம் எல்லாம் எம்பெருமானதீனமாயிருக்கை.

†சேஷத்வமாவது:— எம்பெருமானுக்கு அதிசயத்தை விளைக்கை.

§பரதாழ்வானிடத்திலும், ¶இளையபெருமாளி (லக்ஷ்மணனி)டத்திலுங் காணலாம்.

அறிவுடையவனுகிய ஆத்மாவுக்கு அறிவின்கார்யமாகிய யத்ன பிரயோஜனங்களில்லா தொழிந்தால் ஆத்மாவை அறிவுடையவனென்று எவ்வாறு சொல்வதென்னின்? இங்குத் தன் விஷயமாகச் செய்யும் முயற்சி பிரயோஜனங்கள் பாரதந்தர்ய, சேஷத்வ ஜ்ஞாநங்களால் ஒழியுமென்று சொல்லியதால் ஈசுவரவிஷயமான முயற்சியும்,

---

§பரதாழ்வான், நகரமாந்தரெல்லாரையும் அழைத்துச்சென்று ஸ்ரீராமபிரான் திருவடிகளை வணங்கிநின்று 'அண்ணு! அடியேனும்' இந்த நகரமாந்தரெல்லாம் உமக்கடிமைப்பொருள்கள். அடிமையாயிருப்பவனுக்கு ராஜ்யபரிபாலனஞ் செய்தல் கூடாதாதலால் தேவரீரே எழுந்தருளி ராஜ்யபரிபாலனஞ் செய்தருளவேண்டும்; என்று பிராத்தித்தான். அப்பொழுது ஸ்ரீராமபிரான் பரதாழ்வானைப்பார்த்து நமது தந்தையார் உன்னை ராஜ்யயபரிபாலனஞ் செய்யும்படியும், என்னை வனவாசம் செய்யும்படியும் நியமித்திருக்கின்றுராதலால் அதை மீறிநடப்பது முறையில்லை. ஆகையால் பதினுன்கு வருஷகாலம்கழித்த பின்பு நான்வந்து ராஜ்யபரிபாலனஞ் செய்கிறேன் அதுவரையிலும் நீயே பரிபாலஞ் செய்வாய் என்று கட்டளையிட்டார். பரதாழ்வான் 'பரமனுக்கு வசப்பட்டிருக்கிற நாம் அவன் சொல்லை மீறி நடப்பது தக்கதில்லை'. என்று அப்படியே ஆருக. என்று சம்மதித்தான். இங்குப் பரதாழ்வான் ஸ்வயத்தனத்தை ஒழித்து நின்றுனுதலால் பாரதந்தர்ய நிஷ்டையுடையவனுனன். இதனுல் பாரதந்தர்ய ஜ்ஞாநத்திற்கு ஸ்வயத்தனமொழிதல் பலனுகுமென்பது பெறப்பட்டது.

¶ஸ்ரீராமபிரான் இளையயெருமாளை (லக்ஷ்மணனை) நோக்கி 'நீ நீரும் நிழலும் வாய்ப்புடைய உனக்கிஷ்டமான ஓரிடத்தில் பர்ணசாலை அமைப்பாய்' என்று கட்டளையிட்டார். அப்பொழுது இளையபெருமாள் அண்ணு! அடியேன் தலையில் ஸ்வாதந்தர்யத்தையிட்டுக் கெடுத்துவிட்டீர். இனி ஈடேறப்போவதில்லை. என்று சோகித்து உமக்குப் பிரீதியான கார்யத்தை அடியேன் செய்வதற்கு உரிமைப்பட்டவனுயிருக்க உனக்கிஷ்டமான விடத்தில் பர்ணசாலையிடுக என்று கட்டளையிடுவது முறையில்லை. தேவரீருக்கு இஷ்டமான விடத்தைக் குறிப்பிட்டுத்தரவேண்டும் என்று பிராத்தித்தார். இங்கு இளையபெருமாள் தன் பிரயோஜன விஷயத்தில் கருத்துவைக்காமல் ராமபிரானுக்கு ப்ரீதியுண்டுபண்ணுவதே தனக்குப் புருஷார்த்தமாகக் கொண்டிருந்தாராதலால் சேஷத்வ நிஷ்டையுடையவரானுர். இதனுல் சேஷத்வ ஜ்ஞாநத்திற்கு ஸ்வப் பிரயோஜன நிவர்த்தியே பலமென்பது பெறப்படும்.

பிரயோஜனங்களும் இவனுக்குண்டென்பது பெறப்படும். ஆகையால், ஆத்மா அறிவுடையவனென்பதில் தட்டில்லை. "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்றும், "வழுவிலாவடிமைசெய்யவேண்டும் நாம்" என்றும், "படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே" என்றும் எம்பெருமானுக்கே பிரயோஜனமாக அவனைப் பிரார்த்தித்துப் பெறும் கைங்கர்யமும் இப்படிச் செய்வதால் எம்பெருமானுக்குண்டாகும் உகப்பையே தனக்குப் பிரயோஜனமாகக் கொள்ளுகையுமாகிற அநுஷ்டாநம் ஆழ்வார்களிடத்தில் குடிகொண்டிருந்தது காணலாம்.

இங்கு ஆத்மா, எம்பெருமானுக்கே உகப்பாகச் செய்யுங் கைங்கர்யத்தால் அவனுகக்க அவ்வுகப்பை இவன் பிரயோஜனமாகக் கொள்ளும்போதும் 'இது நமக்கினிமையாயிருக்கிறது' என்று இவனுக்கு அதில் அஹங்கார புத்தியுண்டாகக் கூடாது. இது விஷயம் முன் குறிப்பிடப்பட்ட "படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே" என்பதிலடங்கிக்கிடக்கிறது. எம்பெருமான் உகப்பை உகப்பாகக்கொள்ளுமிடத்தில் அதில் தனக்கு அஹங்கார புத்தி கூடாதென்பதற்குப் "படியாய்க்கிடந்து" என்றார். அறிவுடைய ஆத்மா, அசேதனம்போலிருந்தால் அதற்கும், இதற்கும் வாசியில்லையே என்ற சந்தேகமுண்டாகும் அதை ஒழிப்பதற்காகப் "பவளவாய் காண்பேனே" என்றார். இதனால் ஆத்மா பாரதந்தர்ய, ஜ்ஞாநத்திற்கேற்ப அசித்துப்போலிருக்கையும், அறிவில்லாப் பொருளைக்காட்டிலும் வேறுபாடுதோன்ற அவனைக் காணுதலே புருஷார்த்தமாகக் கொள்ளுதலும் அதற்குக்கடமை என்பது விளங்கும். இதுபற்றியே ஆழ்வார்திருமகளாரும் "உமக்கேநாம்ஆட்செய்வோம்" என்றருளிச்செய்து "மற்றைநம்காமங்கள்மாற்று" என்று அஹங்கார புத்தியை ஒழித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்.

ஆத்மா, எம்பெருமானுடைய உகப்பையே புருஷார்த்தமாகக் கொள்ளவேண்டுமானால் அவனுக்கு அடிமையாயிருக்கவேண்டும். அடிமையாயிருப்பவர்கள்தான் எஜமானனுடைய பிரீதியை உகப்பாகக் கொள்வார்கள். ஆகையால் ஆத்மாவுக்கு அடிமையாயிருக்கு

மிருப்பு ஜ்ஞாநாநந்தங்களைக் காட்டிலும் சிறந்த லக்ஷணம் என்பது பெறப்படும். இதைக்குறித்து லோகதேசிகனும் "அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்" என்று அருளிச்செய்தார். இன்னும் இந்த வாக்யத்திற்கு மணவாள மாமுநிகள் வ்யாக்யானம் அருளிச்செய்ய வந்தவிடத்தில் "'அடியேனுள்ளான்' என்றாரிறே ஆழ்வார்; *திருக்கோஷ்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ஆழ்வான் ஆறுமாஸம் ஸேவித்துநின்று மஹா நிதியாகப்பெற்ற அர்த்தமிறே இது" என்று அருளிச்செய்தார். "நானுமுனக்குப்பழவடியேன்" என்று பெரியாழ்வாரும் பணித்தார்.

ஆத்மா, ஈசுவர சேஷமாயிருப்பதே அதற்கு முக்ய லக்ஷணமாயிருக்குமாகில் ஆத்மாஉள்ளகாலந்தொட்டு அது இருந்திருக்கவேண்டும். அப்படியில்லாமல் ஈசுவர சேஷத்வம் ஒருகால விசே

*உடையவர் காலக்ஷேபஞ் சாதித்துக்கொண்டிருந்தகாலத்தில் ஆத்மதத்வத்தைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தது. அப்பொழுது உடையவர் 'இதன் உண்மையை ஆசார்யன்வாயிலாக வெளியிடவேண்டும்' என்று திருவுள்ளம் பற்றிக் கூரத்தாழ்வானை நோக்கி 'நீர் திருக்கோஷ்டியூர்நம்பி ஸந்நிதியடைந்து ஆத்மதத்வத்தைத் தெரிந்துவாரும்' என்று ஆஜ்ஞாபித்தார். உடனே கூரத்தாழ்வான் திருக்கோஷ்டியூர் நம்பி ஸந்நிதியடைந்து அவரைத் தண்டனிட்டு 'ஸ்வாமி! ஆத்ம லக்ஷணத்தை அருளிச்செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தார். நம்பியும் ஆறுமாதகாலம் அருளிச்செய்யாதிருந்தார். அதன்பின் கூரத்தாழ்வான் 'நாம் கருதிவந்த கார்யம்கைகூடவில்லையே இனி என்செய்வது என்று கவலைகொண்டு திருக்கோஷ்டியூர் நம்பியைத் தண்டன் ஸமர்ப்பித்து நின்று 'அடியேன் ஆசார்ய ஸந்நிதிசென்று வருகிறேன்' என்று புறப்பட்டார். அதுசமயம் திருக்கோஷ்டியூர்நம்பி திருவுள்ளமுவந்து ஆழ்வானை யழைத்து மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார் 'அடியேனுள்ளான்' என்றருளிச்செய்திருப்பதை நீர் அறியீரோ' என்றார். கூரத்தாழ்வான் 'அடியேன் உஜ்ஜீவித்தேன்' என்று மனங்களிப்புற்று உடையவர் ஸந்நிதியடைந்தார்.

ஸர்வேசுவரன், தன்னையடைந்து அநுபவிக்கவேண்டும் என்ற ஆற்றாமைகொண்ட ஆழ்வாரின் ஆற்றாமையெல்லாம் ஒழியும்படி வந்துகலந்து மிகவும் உகப்புடையவனாயிருந்தான். இது விஷயத்தை ஆழ்வார் "மாயக் கூத்தா" என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்தார். பின் ஸர்வேசுவரன் 'இவர்

ஷத்தில் வருவதாய்த் தோற்றுகிறதினாலும், லோகத்தில் அடிமையா யிருக்குமிருப்புத் துக்கரூபமாய் விளங்குகிறதினாலும் ஆத்மாவுக்கு இதை முக்ய லக்ஷணமாக எவ்வாறு கொள்வதெனின்? ஆத்மா தனக்குத்தானே அடிமையாயிருப்பதும், பிறருக்கடிமையாயிருப்

நம்மை இப்பொழுது சேர்ந்தனுபவித்த அநுபவமானது எப்பொழுதும் நடை பெறவேண்டும்; இவரோ 'தார்மிகன்வைத்த தண்ணீர்ப்பந்தலை அழிப்பாரைப் போலவும், ஊருணியிற் கள்ளியைவெட்டிப் போடுவாரைப் போலவும், அம்ருதத்தில் விஷத்தைக் கலப்பாரைப் போலவும் நித்ய ஸூரிகள் அநுபவித் தற்குரிய பரம்பொருளை அயோக்யனான நாம் கிட்டி அழித்து விடலாகாது' என்று தம்முடைய அசித்சம்பந்தத்தை நினைத்து நம்மைவிட்டு அகலும் ஸ்வபாவமுடையவராயிருக்கிறார்; மேலும், ஆழ்வீர் 'உமக்கு நாம் ஆத்ம ஸ்வரூபத்தை விளக்கிக்காட்டுகிறோம் வாரும்' என்றாலும் மின்மினிபோன் றிருக்கின்ற அதனால் என்ன ப்ரயோஜனமுண்டென்று அகன்றுவிடுவார். இவர் ஆதிமுதல் நம்வடிவழகில் ஈடுபடும் ஸ்வபாவமுடையவராதலால் நம்மை முன்னிட்டு நமக்குச் சரீரமாயிருக்கின்ற அவருடைய ஆத்ம ஸ்வரூபத்தைக் காண்பிக்கக்கடவோம். இதைக்காட்டிலும் இவரை வசீகரிப்பதற்கு வேறு வழி யொன்றுமில்லை யென்று தீர்மானித்து, 'ஆழ்வீர்! நம்மைக் காணுகிற காட்சியிலே உம்மையுங்காணீர்' என்று அருளிச்செய்ய ஆழ்வார்,

"கண்கள்சிவந்துபெரியவாயவாயும்சிவந்துகனிந்துள்ளே
வெண்பலிலகுசுடரிலகுவிலகுமகரகுண்டலத்தன்
கொண்டல்வண்ணன்சுடர்முடியனான்குதோளன்குனிசார்ங்கன்
ஒண்சங்கதைவாளாழியான் ஒருவனடியேனுள்ளானே"

என்று அப்படியே கண்டநுபவித்துப் பின்

"அடியேனுள்ளானுடலுள்ளானண்டத்தகத்தான்புறத்துள்ளான்
படியேயிதுவென்றுரைக்கலாம்படியனல்லன்பரம்பரன்"

என்று அருளிச்செய்தார். இதனால் இத்திருவாய்மொழி ஸர்வேசுவரன் ஆழ்வாருக்கு ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மைநிலையைத் தெரிவிக்கவந்த பிரகாண மென்பது விளங்கும். ஆகையால் ஆத்மாவிலுள்ளான் என்று சொல்லவந்த விடத்தில் ஆத்மாவின் முக்ய லக்ஷணத்தைக் குறித்து "அடியேனுள்ளான்" என்று அருளிச்செய்தார். இதைக்குறிப்பிட்டே இங்குத் திருக்கோஷ்டியூர் நம்பி கூரத்தாழ்வானை நோக்கி மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் 'அடியேனுள்ளான்' என்றது கண்டாயே என்று அருளிச்செய்தார்.

பதும் இடையிலே வந்தனவாம். இவற்ருல் நித்யமாயுள்ள பகவச்சேஷத்வ ஜ்ஞாநம் மறைபட்டிருக்கும். இம்மறைவு ஒழிந்தவுடன் நித்யமாயுள்ள பகவச்சேஷத்வ ஜ்ஞாநம் பிரகாஸிக்கும். இக்கருத்துப்பற்றியே லோகதேசிகனும் "அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக்கழியாதபேர் அடியான் என்றிறே" என்று அருளிச்செய்தார். ஜ்ஞாநாநந்த அமலத்வாதிகளையுடைய ஸர்வேசுவரன் விஷயத்தைப்பற்றிவருகிற சேஷத்வமாதலால் அது சுகரூபமாயிருக்குமேயன்றி துக்கரூபமாயிராது. ஆதலால் ஆத்மாவுக்கு சேஷத்வமே முக்ய லக்ஷண மென்பதிற் குறையில்லை. இதுவரையுங் கூறியதினுல் ஆத்மா, ஜ்ஞாநாநந்தங்களைக் குணமாகவும், லக்ஷணமாகவுமுடையதென்றும், பகவச் சேஷமாயிருப்பதே அதுக்கு முக்ய லக்ஷணமென்றும் சொல்லப்பட்டன.

இப்படி பகவச்சேஷமாயிருக்கிற ஆத்மாவை அவரவர் தம்தம் மனநிலைக்கேற்றபடி நினைக்கிருர்கள். சம்சாரிகள், தங்கள் அருமைப் புத்திர, மித்ர, பந்துக்களோடு உறவாடியும், உண்டுடுத்தியுந்திரிவதே சிறந்த புருஷார்த்தமாகக்கொண்டு தம்வாழ்நாளை வீணுளாகக் கழித்துப் போவார்களாதலால் ஆத்மாவைச் சரீரம் என்று கருதுவார்கள். சிற்றின்பத்தில் விருப்புடையவன், சிற்றின்பத்தை அநுபவிப்பதினுமிக்கதோர் சுகமில்லையென்று அறுதியிட்டிருப்பானுதலால் இவன் ஆத்மாவைக் காமுகன் என்று நினைத்திருப்பான். இவ்விருவரும் அஜ்ஞாநிகள் என்று சொல்லப்படுவார்கள்.

இனி ஜ்ஞாநவான்களுள் கைவல்யநிஷ்டன், "குறுகமிகவுணர்வத்தொடுநோக்கி எல்லாம்விட்ட இறுகலிறப்பென்னும் ஞானி" என்றபடி இதர விஷயங்களிற் பற்றற்று ஆத்ம விஷயத்தில் நோக்குடையவனுய் ஈசுவரனை அநுபவித்தல் முடிவாகவுள்ள ஆசையெல்லாமொழித்து (பகவதாநந்தத்திலும் எத்தனையோ மடங்கு குறைந்த) சிறிதாயுள்ள ஆத்மாநுபவமே மோக்ஷமென்று சொல்லும் ஜ்ஞாநியாவான். இவன் சம்சாரபந்தத்தாலுண்டாகும் பெருந்துன்பத்தைக்கண்டு 'அந்தோ! இத்துக்கத்தினின்றும் எவ்வாருவது நீங்கவேண்டும்' என்று பகவதுபாஸநத்தைப்பண்ணி அவன் அநுக்ரஹத்தால் ஆத்ம மோக்ஷத்

தைப்பெற்று அதை அநுபவிப்பதேசிறந்த புருஷார்த்தமென்று நிச்சயித்திருப்பானுதலால்; இவன் ஆத்மாவை ஸ்வதந்தரன் என்று நினைத்திருப்பான்.

அத்வைதி,

"ஆதிசம்பந்தமாய்வருகின்றவவித்யாசபளிதத்தாலே
ஏதமில்பிரமம்பேதமேபோலவிரித்திடுமென்றுமுத்தியிலே
தீதறுஞானசித்தியானதற்பின்சீவனும்பிரமமேயென்றும்
பேதமிலென்றும்..........."

என்றபடி அநாதியான அவித்யா ஸம்பந்தத்தால் பரப்ருஹ்மமானது, ஜீவபரபேதமாய் விளங்காநிற்கும். பின்மோக்ஷ தெசையில் ஜீவனும், ப்ருஹ்மமும் ஒன்றுமாதலால் ஜீவபேதமென்பதொன்றில்லை என்ற சித்தாந்தத்தைக்கொண்டவனுதலால்; இவன் ஆத்மாவை ஸர்வஜ்ஞன் என்று நினைத்திருப்பான்.

கர்மயோகநிஷ்டன், தன்னால் மோக்ஷசாதனமாக அநுஷ்டிக்கப்பட்ட கர்மயோகம், தேசவாசம், திருநாமஸங்கீர்த்தனம், திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை என்ற இவை முதலிய ஸத்கர்மாக்களாலுண்டாகும் பலனையநுபவித்தற்கு 'நாமேபோக்தாவாவோமென்று உறுதிகொண்டிருப்பவனுதலால் இவன் ஆத்மாவைப் போக்தாவாக நினைப்பான்.

ஜ்ஞாநி, 'தானல்லாத உடம்பை நான் எனநினைக்கும் அகப்பற்றும், தன்னோடு ஸம்பந்தமில்லாத பொருளை எனது எனக்கருதும் புறப்பற்றும் என்ற இருவகைப்பற்றுக்களே பிறவி வித்துக்களாம்; இவ்விருவகைப்பற்றுக்களையும் ஒழித்தாலன்றிப் பிறவித்துன்பங்கள் நீங்கமாட்டா' என்றுநினைத்து அவற்றில் ஆசையற்று எம்பெருமானை யடைந்தவனுதலால்; இவன் ஆத்மாவை விரக்தனுக (ஆசையில்லாதவனுக) நினைப்பான்.

ப்ரபந்நன், சாஸ்திரங்களில் மோக்ஷ ஸாதனமாகச் சொல்லப்பட்டுள்ள கர்ம ஜ்ஞாந பக்தி முதலியவைகளே மோக்ஷ ஸாதனமாம் என்ற புத்தியை அடியோடு ஒழித்து

எம்பெருமானையே உபாயோபேயமாகப்பற்றினவனுவான். இவன் எம்பெருமானைத் தஞ்சமாகப்பற்றிய விடத்திலும 'நாம் இவனைத் தஞ்சமாகப் பற்றினேம் இதனல் நல்லபலனை யநுபவிக்கப்போகி றேம்' என்ற பற்றுதலிலும் உபாயபுத்தியற்றுத் தனக்கோர் நன்மை யுண்டுபண்ணிக் கொள்வதிலும் முயற்சியொழித்து 'எம்பெருமான் நம்மையாது செய்யினும் செய்க.' என்று அவனுக்குக் கிரைய விக் கிரையப் பொருளாக்கிச் சிறிதேனும் ஸ்வந்தரமற்றவனுதலால் இவன் ஆத்மாவை அசித்தாக நினைத்திருப்பான்.

இதனுல், ஜ்ஞாநிகள், ஜ்ஞாநமில்லாதவரென்ற இருவகை யினரும் தம்தம் மனநிலைக்கேற்றபடி ஆத்மாவைக் கருதியிருப்பார்க ளென்பதுரைக்கப்பட்டது.

ஸ்ரீ:

ததீயாராதனம்.

சென்ற எட்டாவது பகுதியில் 'ததீயசேஷத்வம்' என்று வெளி யிடப்பட்ட வியாஸத்தில் ததீயர்களின் பெருமையெல்லாம் விரிவாக வும், விளக்கமாகவும், எழுதப்பட்டன. இங்கு அவர்களை ஆராதிக் கும் ஆராதனையின் பெருமை சொல்லப்படுகிறது. ததீயாராதன மாவது:— எம்பெருமானுடைய அடியவரை ஆராதிப்பதாம். ஆரா தனமாவது:— எஜமானனுக்கு மகிழ்ச்சியுண்டாம்படி அடிமையா யிருப்பவன் செய்யும் கைங்கர்ய விசேஷமாம். உபசாரம், பணிவிடை, பக்தி, அர்ச்சனம் முதலிய சொற்களும் ஆராதனையைக் குறிப்பிடுவ தாகும். ததீயாராதனையின் பெருமை "ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம், தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயா ராதநம் ந்ருப". (எல்லா ஆராதனங்களிலும் விஷ்ணு ஆராதனம் சிறந்தது அதனினும் சிறந்தது அவனடியார்களை ஆராதிப்பதாம்.)

என்று சொல்லப்பட்டதால் அறியலாம். பெரியாழ்வார் திருக்கோஷ்டியூர் விஷயமாக அருளிய திருமொழியில்

"நாவகாரியஞ்சொல்லிலாதவர்நாடொறுவிருந்தோம்புவார்
தேவகாரியஞ்செய்துவேதம்பயின்றுவாழ்திருக்கோட்டியூர்"

என்று அருளிச்செய்தார். இங்குத் தேவகாரியஞ்செய்து விருந்தோம்புவார் என்றில்லாமல் 'விருந்தோம்புவார் தேவகாரியஞ் செய்து' என்றிருப்பதால் திருக்கோஷ்டியூரில்வாழும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ததீயர்களை ஆராதிப்பதே முக்யமாகக்கொண்டு அவர்கள் உகப்பிற்காக பகவதாராதநஞ் செய்கிறார்கள் என்று குறிப்பிடப் பட்டதாம். "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்று ஆழ்வாரைத்தவிர மற்றொரு தெய்வத்தை யறியாத மதுரகவிகள், ஆழ்வாருடைய உகப்பிற்காக 'கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப், பண்ணியபெருமாயன்..." என்று கண்ணன் விருத்தாந்தத்தை அருளிச்செய்தார். அதுபோல் திருக்கோஷ்டியூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள், எம்பெருமானுடைய அடியவர்கள் பகவதாராதனமான அந்நத்தைத்தவிர மற்ற அந்நத்தை உட்கொள்ள்மாட்டார்களென்று அவர்கள் உகப்பிற்காக பகவதாராதனஞ் செய்கிறார்கள். இதனால் அவர்களுடைய முக்யநோக்கம், ததீயாராதனவிஷயத்தில் ஊன்றியிருந்ததென்பது பெறப்படும். இது நிற்க,

"நடமினோநமர்களுள்ளீர்நாமுமக்கறியச்சொன்னோம்" என்று ஆழ்வார் எம்முடைய ஸம்பந்திகளாயிருப்பீர்களாகில் திருவநந்தபுரம் சென்று எம்பெருமானை வணங்கக்கடவீர்களென்று அருளிச்செய்திருப்பதை அறிந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளக்கூடித் திருவனந்தபுர யாத்திரை செய்துவருகிற காலத்தில் திருக்கோஷ்டியூரில் செல்வநம்பி திருமாளிகைக்குச் சென்றார்கள். அப்பொழுது செல்வநம்பி கார்யார்த்தமாக அயலூர் சென்றிருந்தார். அவர் தேவியார் 'நாம் செய்தபாக்யத்தால் நாம் ப்ரார்த்தித்துக்கொள்ளாதிருக்க ஸ்ரீவைஷ்ணவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள்' என்ற உகப்பால் தம் திருமாளிகையிலிருந்த நூறு கோட்டை நெல்லைக் குத்தி அவர்கள் உகக்கும்படி அமுது செய்தருளப்பண்ணினார். அவர்களும் திருப்தி

யுடையவர்களாய் விடைபெற்றுக்கொண்டு திருவநந்தபுரஞ் சென்றார்கள். மறுநாள் அயலூர் சென்றிருந்த செல்வநம்பி எழுந்தருளி தம் திருமாளிகையில் நெல்லில்லாதிருப்பதைக்கண்டு தம் தேவியரை நோக்கி நெல்லை யாது செய்தனை யென்றுகேட்டார். தேவியார் 'பரமபதத்திலே விளைவதாகவித்தினேன்' என்றார். இது கேட்ட செல்வநம்பி மிகவும் ஆநந்தமடைந்தார்.

திருக்கச்சிநம்பியின் தகப்பனார் வீரராகவரென்பவர் தாம் கூட்டிய பொருள்களைத் தம் குமாரர்கள் நால்வருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அவர்கள் ஒவ்வொருவரும் பங்குப்பொருளைப் பெற்றுக் கொண்டு தங்கள் வர்ணத்துக்குரியதாகிய வியாபாரத்தைச் செய்தனர். திருக்கச்சிநம்பி தமக்குக்கிடைத்த பங்குப்பொருளைத் ததீயாராதனத்தில் விநியோகஞ்செய்தார். பின் தந்தையார் குமாரர் நால்வரையும் அழைத்து நாம் பங்கிட்டுக் கொடுத்த நிதிகளை நீங்கள் என்ன செய்தீர்களென்று கேட்டார். அப்பொழுது ஒவ்வொருவரும் தான்பெற்ற பொருளைக்கொண்டு வியாபார வழியாய் மிகுதியும் சேகரித்திருப்பதைக் காட்டினார். திருக்கச்சிநம்பியை அழைத்து நீ பொருளை என்ன செய்தனை என்று கேட்டார். திருக்கச்சிநம்பி 'நான் அதைக் கல்ங்காப்பெருநகரில் சேமித்துவைத்தேன்.' என்றார். இந்த இரண்டு வரலாற்றாலும் ததீய விஷயமாகச் செலவிடும் செலவிற்கு நித்யமான அதிருஷ்ட பலமுண்டென்பது பெறப்படும்.

இது நிற்க, வறியர், பசியாளர் முதலிய இவர்களும் பகவத் விபூதியிலுள்ளவர்களென்ற ஸம்பந்தத்தை முன்னிட்டு அவர்களிடத்தில் இரக்கங்கொண்டு அவர்களை ஆதரிப்பதையும் தர்மசாஸ்திரத்தில் சிறந்த தர்மாகச் சொல்லப்பட்டுள்ளது. இதைக்குறித்துப் பெரியாழ்வாரும்,

*"காசின்வாய்க்கரம்விற்கினும்கரவாதுமாற்றிலிசோறிட்டுத்
தேசவார்த்தைகள்படைக்கும்வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர்"

*இதன்பொருள்:— ஒருகைபிடியளவு பொற்காசிற்கு ஒரு கைபிடியளவு நெல் விற்கின்ற கொடிய பஞ்சகாலத்திலும் தங்கள் கையிலுள்ள தன தான்யங்களை 'நமக்குப் பின்வேண்டும்' என்ற நினைவால் மறைத்துக்கொள்ளாமல் வறியருக்கு அன்னமளித்துத் தேசத்தவரால் புகழ்பெற்ற கொடைத் தன்மையுடையவர்கள் வாழ்கின்ற திருக்கோஷ்டியூர் என்பதாம்.

என்று அருளிச்செய்தார். முன் குறிப்பிடப்பட்ட "நாவகாரியம்" என்றபாட்டுத் ததியாராதன விஷயம். இந்தப்பாட்டு †ஸர்வாதித்ய விஷயம். இதைப்பற்றி " 'நாடொறும் விருந்தோம்புவார்' என்றுப் போலே இத்தையும் விசேஷவிஷயமாக்கினாலோவென்னில் 'சோறு' என்றும், 'இட்டு' என்றும் சொல்லுகையாலே இதை வைஷ்ணவ விஷயங்களிலாக்கப் போகாது, ஆனபின்பு இது ஸாமாந்யவிஷயமா மித்தனை". என்று வ்யாக்யாதாவும் அருளிச்செய்தார். தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் 'விருந்தோம்பல்' என்ற அதிகாரத்தில்,

"அகனமர்ந்துசெய்யாளுறையுமேமுகனமர்ந்து
நல்விருந்தோம்புவானில்" என்றும்,

"செல்விருந்தோம்பிவருவிருந்துபார்த்திருப்பான்
நல்விருந்துவானத்தவர்க்கு" என்றும்,

விருந்தோம்புதற்கு இம்மைப்பலனும், மறுமைப்பலனும் உண் டென்று கூறினார். இது, இல்வாழ்வான் முக்ய தர்மமாகக் கொண் டொழுகும் தன்மையுடையதாகும். இதை வலியுறுத்துதற்கு இங்கு ஒரு விருத்தாந்தம் எடுத்துரைக்கப்படும்.

*வாஜச்ரவஸ் என்ற ஒருவர் இருந்தார். இவர் அன்னதானஞ் செய்வதே முக்ய தர்மமாகக்கொண்டு தம் வாழ்நாளையெல்லாம் அதிலே கழித்து வந்தாராதலால் அப்பெயர் பெற்றார். இவருடைய அருமைப்புதல்வர் உத்தாலகர். இவர் விசுவஜித் என்ற யாகஞ்செய் யத் தொடங்கினர். யாகமும் பூர்த்திபெற்றது. இந்தயாகமுடிவில் தமக்குள்ள எல்லாப் பொருளையும் தானஞ்செய்து விடவேண்டிய முறையாதலால் அம்முறைப்படி தம்மிடத்திலுள்ள பொருளைத் தானஞ்செய்யத் தொடங்கி உபயோகமில்லாத பசுக்களைத் தானஞ்

---

†ஸர்வாதித்யமாவது:— இன்னாருக்கிடுவேது; இன்னாருக்கு இடலாகாது என்ற வேறுபாடில்லாமல் லோபியர், வறியர், பசியாளர் முதலிய அதிதிகளின் பொருட்டுச் செய்வதாம்.

*வாஜம்-அன்னம்; அதைக்கொடுப்பதாலுண்டாகிய சிரவ:— கீர்த்தி யானது; எவனுக்கிருக்கின்றதோ அவன் வாஜச்ரவஸ்.

செய்துகொண்டிருந்தார். இதுகண்ட அவரது சிறுபிராயமுடைய நசிகேதஸ் என்பவன் 'நம்பிதா இந்த யாகபலனால் ஸ்வர்க்கமடைதற்குரியவர்; இந்த ஸமயத்தில் உபயோகமுடைய வஸ்துக்களைத் தானஞ்செய்யவேண்டிய முறையிருக்க அதை ஒழித்து உபயோகமில்லாதவையாயும், ஸ்வர்க்க ஸாதனமாகாதவையாயு மிருக்கின்ற பசுக்களைத்தானஞ் செய்கின்றாரே;' என்று கவலையுடையவனாய்த் தகப்பனாரை நோக்கி ஐயா! என்னை யாருக்குத் தானஞ்செய்யப் போகிறீர் என்று கேட்டான். உத்தாலகர் ஏதோ சிறுவன் தெரியாது கேட்கிறான் என்று உதாசினத்துடன் பேசாதிருந்தார். அதன்பிறகும் நசிகேதஸ் ஐயா! என்னை யாருக்குத் தானஞ்செய்யப் போகிறீர் யாருக்குத் தானஞ்செய்யப்போகிறீர் என்று இருமுறை வற்புறுத்திக் கேட்டான். உத்தாலகருக்கு இவன் மீது சீற்றமுண்டாகி 'இவன் துஷ்டனாயிருக்கிறான்' என்று அடா! உன்னை யமனுக்குக் கொடுத்தேன் என்றார்.

நசிகேதஸ், 'தானம்வறியவருக்குச் செய்யினன்றோ பிரயோஜனமுடையதாகும்; இடம்பொருள் ஏவல் முதலிய எல்லாவற்றாலும் யாதொரு குறைபாடில்லாத யமனுக்கு நம்மைக் கொடுப்பதால் நம்பிதா அவனுக்கு யாது பிரயோஜனம் செய்யப்பட்டவரானார்; ஒன்றுமில்லையே, இது அவர் கோபத்தால் கூறியதாகும்; ஆனாலும் அவருடைய வார்த்தையை வீணாக்கக்கூடாது, என்று மனவருத்தங் கொண்டிருந்தான். இந்நிலையறிந்த உத்தாலகர் மகனே! நீ பொறுமையும், நல்லறிவுடையவனுமாகையால் உன்னை யமனுக்குக் கொடுக்க விருப்பமில்லை. நான் கோபத்தால் அவ்வாறு சொன்னேன் என்றார். நசிகேதஸ் 'ஐயா! நீர் நம்முன்னோர்களிருந்த முறையையும், பெரியோர்களின் ஒழுக்கத்தையும் ஆராய்ந்துபாரும்; மனிதனே பயிர்போல ஜீரணித்து மரணமடைகிறான்; பின் பயிர்போலப் பிறக்கிறான்; பிறப்புண்டானால் இறப்புண்டென்பது நிச்சயமன்றோ! அப்படியிருக்கப் பொய்பேசுவதால் என்ன பிரயோஜனமுண்டு, உம்முடைய ஸத்தியத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்' என்று சொல்லிவிட்டு யமனிடத்திற்குச் செல்லலுற்றான். அப்பொழுது அசரீரி நசிகேதஸ்ஸை நோக்கி 'நீ யமன் இல்லாதிருக்கும் சமயம்பார்த்து அவன்

இல்லத்திற்புகுவாய் அப்பொழுது அவனில்லத்திலுள்ள மனைவியர் முதலானர் பிரார்த்தித்துக்கொண்டாலும் நீ உணவருந்தாதிருப்பாய்; பின் யமன்வந்து 'நீ இங்கு எத்தனைநாள் தங்கினை என்றால் மூன்று நாள் தங்கினேன் என்று சொல்லுவாய்; முதல் நாள் என்ன உண்டாய் என்றால் உன்னுடைய பிரஜைகளையுண்டேனென்றும், இரண்டாம் நாள் என் செய்தாய் என்றால் உன்னுடைய பசுக்களையுண்டேனென்றும், மூன்றாம்நாள் என் செய்தாய் என்றால் உன்னுடைய புண்ணியபலன்களை யுண்டேனென்றும் சொல்வாய்' என்று கூறியது. நசிகேதஸ் மிகவும் களிப்புக்கொண்டு யமனுடைய இல்லஞ்சென்றான். அப்பொழுது இவனுடைய நல்ல அதிருஷ்டத்தால் யமன் பிர்ம்மலோகஞ் சென்றிருந்தான். யமனுடைய மனைவியர் முதலாயினோர், 'இங்கு வந்திருக்கின்ற அதிதியை நாம் ஆதரிக்கவேண்டும்', என்று அதிதிபூஜை செய்யத்தொடங்கினார்கள். அப்பொழுது நசிகேதஸ் அவர்களைநோக்கி 'யஜமானன் இல்லாத வீட்டில் ஆதித்யம் கொள்ளலாகாது' என்று சாஸ்திரங் கூறியிருக்கின்றதினால் உங்களால் கொடுக்கப்பட்டபொருளை நான் க்ரஹிக்கமாட்டேனென்று மூன்றுநாள் பட்டினிகிடந்தான்.

பின் பிர்ம்மலோகஞ் சென்றிருந்த யமன் வந்தான். அது ஸமயம் யமனுடைய மனைவியரும், மந்திரிமாரும் யமனைநோக்கி 'அதிதியானவன் அக்னியாகவே வீட்டிற் புகுகின்றானாதலால் பெரியோர்கள் அந்த அக்னியை சாந்தப்படுத்துதற்காக அதிதியை *அர்க்யம் §பாத்யம் †ஆசமனமுதலியவைகளால் உபசரிக்கிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால் குடும்பநாசமுண்டாம்' என்று நாம் சாஸ்திரத்தால் கேள்வியுற்றிருக்கின்றோமல்லவா! இப்பொழுது நம் க்ருஹத்திற்கு ஒரு அதிதி வந்திருக்கின்றான் அவனை நீர் உபசரிக்கக்கடவீர்; என்றார்கள். அது கேட்ட யமன் நசிகேதஸ்ஸை அர்க்யமுதலியவற்றால் உபசரித்துக் 'குமாரனே! நீ இங்குவந்து எத்தனைநாளாயிற்று' என்று கேட்டான். நசிகேதஸ் நான் இங்குவந்து மூன்று நாளாயின; என்

---

*அர்க்யம்-கையலம்பும் நீர். §பாத்யம்-பாதமலம்பும் நீர். †ஆசமனம்-சிறுக உட்கொள்ளும் நீர்.

ருன். யமன் மூன்று நாளும் என்னசெய்தாய் என்று கேட்டான். நசிகேதஸ் முதல் நாள் உம்முடைய பிரஜைகளையும், இரண்டாம் நாள் உம்முடைய பசுக்களையும், மூன்றும் நாள் உம்முடைய புண்ணியங்களையும் உண்டேன் என்ருன். யமன் 'விருந்தினரை ஆதரிக்காவிட்டால் சந்ததிநாசமும், பொருள்நாசமும், புண்ணியநாசமும் உண்டாகுமென்ற சாஸ்திரமுடிவைத்தெரிந்து இவன் பேசுகிருன்; இவன் வடிவால் சிறியனுயினும் அறிவால் பெரியனுகிருன்'. என்று கருதி நசிகேதஸ்ஸை நமஸ்கரித்து எனக்கு மங்களம் உண்டாகுக; உனக்கு என்னிடத்தில் வரம் பெற்றுக்கொள்ள இச்சையில்லாவிட்டாலும் என்னுடைய க்ஷேமத்தைக் குறித்து நீ சாப்பிடாதிருந்த மூன்று நாளிற்கும் மூன்றுவரங்களைக் கேட்டுக்கொள்ளென்று வேண்டினன். அப்பொழுது நசிகேதஸ் தருமனே! என்பிதாவான உத்தாலகர் 'யமனிடஞ்சென்ற புத்ரனுடைய கெதியென்னுயிற்ரு' என்று கவலைகொண்டிருப்பார்; அவருடைய கவலை ஒழிந்து என்மீது கோபமற்ற நல்லமனதுடையராயிருத்தல் வேண்டும். இன்னும் அவர் 'இவன் பிரேதமாய் எமனிடத்திலிருந்து வந்தான்; ஆதலால் இவன் முகத்தில் விழிக்கக்கூடாது' என்று கருதாமல் முன்போல என்னைப் புத்திரனுக மதிக்கவேண்டும். இது, என் பிதாவிஷயமாகக் கேட்டுக் கொள்ளப்படும் முதல்வரமாம். இன்னும் யான் உம்மால் உண்டாகும் பயம் ஒழிந்து நிரதிசயாநந்த வாழ்வாகிய மோக்ஷம் பெறவேண்டும். அந்தமோக்ஷம் பெறுதற்குரிய ஜ்ஞாந ஸம்பத்தும் எனக்குண்டாக வேண்டும். இந்த மூன்று வரங்களையுந்தந்தருளவேண்டுமென்ருன். யமன் அப்படியே தந்தோம் என்று அநுக்ரஹித்தான். அதன்பின் நசிகேதஸ் உத்தாலகரை அடைந்து சுகமாகவாழ்ந்திருந்தான்.

இந்த வரலாற்ருல், இல்வாழ்வான் விருந்தினரை ஆதரிக்க வேண்டுமென்பதும், ஆதரிக்காவிட்டால் அவன் சந்ததி, பொருள், புண்ணியமெல்லாம் ஒழிந்துபோமென்பதும் விளங்குகின்றன. இக்கருத்தெல்லாம் உட்கொண்டே தெய்வப்புலமைத்திருவள்ளுவனுரும் "வருவிருந்துவைகலுமோம்புவான்வாழ்க்கை, பருவந்து பாழ்படுதலின்று" என்றும், "பழியஞ்சிப்பாழ்த்தூணுடைத்தாயின் வாழ்க்கை, வழியெஞ்சலெஞ்ஞான்றுமில்" என்றும் விருந்தினரை ஆதரிப்பானுடைய வாழ்க்கையும், சந்ததியும், வறுமையும், குறைவுமடையமாட்டா என்று கூறினர்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவதத்வதிவாகரம்.

[167-ம் பக்கத் தொடர்ச்சி.]

சகு— பரம்பரையாகவந்த ஆசார்யனைக்காட்டிலும் ஜ்ஞாநாநுஷ்டாநங்களையுடைய ஆசார்யனே முக்யனாவானென்று நீ கூறியது உண்மைதான். அதற்கு இன்னும் சில வசனங்களுண்டு அவற்றைச் சொல்லுகிறேன். "அந்தச்ச அந்த கராலம்பி கூபாந் நிபததோயதா ஜ்ஞாநஹீநம் குரும்ப்ராப்ய குதோ மோக்ஷ வாப்நுயாத்". (ஒரு குருடன் கையை மற்றொரு குருடன் பிடித்துக்கொண்டுபோனால் இருவரும் வழிதெரியாமல் எப்படிக்கிணற்றில் விழுவார்களோ அப்படியே ஜ்ஞாநமில்லாத குருவைப்பற்றின ஜ்ஞாநமில்லாத சிஷ்யன் எப்படி மோக்ஷமடைவான்) என்றும், ஒட்டை ஓடத்தோடு ஒழுகலோடத்தைப் பிணைப்பது போலவும்' என்றும் சொல்லப்பட்டனவாம். இப்படி யிருந்தபோதிலும் இதிலும் யோஜிக்கவேண்டியதுண்டு. அஃதாவது நம்பூர்வாசார்யர்களுடைய வசனங்களுக்கு அர்த்தம் செய்வதாயிருந்தால் அவர்களுடைய பூர்வோத்தர வசனங்களுக்கு விரோதமின்றியும், அவர்களுக்கு முந்தின ஆசார்யர்களுடைய வசனங்களுக்கு விரோதமின்றியும் அர்த்தங்கொள்ள வேண்டும். அவர்கள் ஏககண்டர்கள் (ஒரே அபிப்ராயமுடையவர்கள்.)

அவர்கள் சிலவற்றை வசனங்களாலும் சிலவற்றை அநுஷ்டானங்களாலும் தெரிவிப்பார்கள். இது விஷயம் மணவாளமாமுனிகள் "முன்னோர்மொழிந்த முறைதப்பாமற்கேட்டு" என்றும், "பூர்வாசார்யார்கள் போதமநுட்டானங்கள்" என்றும் அருளியதாலறியலாம். இனி, மேலும் "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்" (மஹான்களின் கொள்கையே முக்யப்ரமாணமாம்) என்றும், "த்வதீய கம்பீர மனோநுஸாரிண:" (மஹான்களின் கருத்தை அநுஸரித்தே வேதமும் பின்பற்றிச் செல்லுகின்றது) என்றும் உரைத்ததால் வேதத்தைக் காட்டிலும் மஹான்களின் அநுஷ்டானத்திற்குப் பெருமை சொல்லப்

பட்டதாயிற்று. இங்கு இவர்களுடைய அநுஷ்டாநத்திற்குப் பெருமை சொல்லியதற்குக்காரணம் தர்மஜ்ஞத்வமாம். அஃதாவது:- "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று தர்ம சப்தத்தால் சொல்லப்பட்ட பகவத் ஸ்வரூப ரூபாதிகளை அர்த்தபஞ்சதஜ்ஞாநத்தோடு உள்ளபடி அறிகையாம். இது வேதத்திற்கும் இல்லை. அதனால் சொல்லப்படுகிற பரம்பொருளாகிய ஸர்வேசுவரனுக்குமில்லை. வேதத்திற்கில்லாதொழிந்தது அஹங்காரதோஷமாம். இதனால் பகவதாநந்தகுணத்தை அளவிடவேண்டுமென்று முயன்றுசென்று "நேதிநேதி" (இவ்வளவென்று கணக்கிடும் அளவுடைபதில்லை) என்று திரும்பியது. ஸர்வேசுவரனுக்கில்லாதொழிந்தது குருகுல வாஸஞ் செய்யாமையாம். இதனால் அவன் தனக்கும் தன் தன்மை யறிவரியனானன்.

மஹான்கள் பகவத் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்ததற்குக் காரணம் ஸதாசார்யர்களுடைய கடாக்ஷமாம். இதுபற்றியே ஆழ்வாரும் "பெரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன்பெறுமாறு" என்று அருளிச்செய்தார். இங்குப் 'பெறுதபயன்' என்றது வேதத்தாலும் பெறுதற்கரிதாயிருக்கின்ற பரமபுருஷார்த்தமாம். மஹான்களின் வசனநுஷ்டானங்களுக்குப் பெருமையுண்டென்பதை இப்பொழுதும் பெருமாள் புறப்பாட்டில் முன்பே திவ்யப்ரபந்தம் அநுஸந்திக்கப்பட்டுவருவதாலறியலாம். இதுவரையுங் கூறியதினால் பூர்வாசார்யர்கள், புருஷார்த்த ஸ்வரூபத்தை வசனங்களாலும், அநுஷ்டானத்தாலும், வெளியிட்டார்களென்றும், அவர்களுடைய வசனநுஷ்டானங்களுக்கு முன்பின் விரோதமில்லாமல் அர்த்த நிச்சயஞ் செய்ய வேண்டுமென்றும், அவர்களுடைய அநுஷ்டானமே மிகச்சிறந்ததென்றும் உரைக்கப்பட்டன.

இனி, நம்பூர்வாசார்யர்களுடைய அநுஷ்டானங்களை ஆராய்ந்து பார்த்தால் ஆசார்யன் ஜ்ஞாநாநுஷ்டானங்களை யுடையவனாயிருத்தலோடு ஜ்ஞாநாநுஷ்டானங்களையுடைய பரம்பரைச்சார்புடையவனாயுமிருத்தல்வேண்டும் என்பது விளங்கும். இக்ஷ்வாகு வம்சத்திற்கு வசிஷ்டமாமுனிவர் குலகுருவாகவும், ஜனகவம்சத்திற்குக் கௌதமர், சதாநந்தர் குலகுருக்களாகவுமிருந்து வந்திருக்கின்றார்களா

தலால் அக்காலத்து ராஜவம்சத்தினரும், முன் குறிப்பிடப்பட்ட ஞானமும், நற்குடிப் பிறப்பும் ஒருங்கமையப்பெற்றவனையே ஆசார் யனாகப்பற்றினார்கள் என்பதறியலாகும்.

ஆசார்யபரம்பரையும், திருமேனி ஸம்பந்தத்தாலுண்டாவதும், திருவடி ஸம்பந்தத்தாலுண்டாவதும் என இரண்டு வகைப்படும். அவற்றுள் திருமேனி ஸம்பந்தமாவது:— பிதுரு, புத்ர, பௌத்ர க்ரம ரூபமானது. திருவடி ஸம்பந்தமாவது:— ஆசார்ய சிஷ்யக்ர மத்தால்வருவது. இது ஜ்ஞான பரம்பரா ரூபமான உபதேச பரம் பரையாம். நம்மாழ்வார் முதல் உடையவர் காலம்வரை சிலர் ஜ்ஞாந பரம்பரையையும், சிலர் வம்சபரம்பரையையும் சிலர் உபயபரம்பரை யையும் கையாண்டு வந்திருக்கின்றார்கள். உடையவர் காலத்திற்குப் பின் உடையவர் உபயபரம்பரையும் ஓரிடத்தில் அமையப்பெற் றிருக்க வேண்டுமென்ற திருவுள்ளம்பற்றி எழுபத்திநான்கு ஸிம் ஹாஸநாதிபதிகளே ஆசார்ய ஸ்தாநத்தைவஹிக்கவேண்டும் என்று அறுதியிட்டருளினார்.

எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளாவார்:- ஆளவந்தார் குமாரர் சொட்டைநம்பி, அவர் குமாரர் என்னாச்சான், அவர் குமாரர் பிள்ளையப்பன்; பெரிய நம்பிகுமாரர் புண்டரீகர், திருக்கோட்டியூர் நம்பி குமாரர் தெக்காழ்வான், திருமாலையாண்டான் குமாரர் சுந்தரத் தோளுடையார், பெரியதிருமலைநம்பி குமாரர் ராமாநுஜனும், பிள்ளைத் திருமலைநம்பியும்; கூரத்தாழ்வான் குமாரர் பட்டரும், சீராமப்பிள்ளை யும்; முதலியாண்டான், அவர்குமாரர் கந்தாடையாண்டான்; நடுவிலாழ் வான், கோமடத்தாழ்வான், திருக்கோவலூராழ்வான், திருமோகூ ராழ்வான், பிள்ளைப்பிள்ளையாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ் வான், அநந்தாழ்வான், மிளகாழ்வான், நெய்யுண்டாழ்வான், சேட் டலூர்சிறியாழ்வான், வேதாந்தியாழ்வான், கோயிலாழ்வான், உக்க லாழ்வான்; அரணபுரத்தாழ்வான், எம்பார், கிடாம்பியாச்சான், கணியனூர்சிறியாச்சான், ஈச்சம்பாடியாச்சான், கொங்கிலாச்சான், ஈச்சம்பாடிஜீயர், திருமலைநல்லான், சட்டம்பள்ளிஜீயர், திருவெள் ளறைஜீயர், ஆட்கொண்டவில்லிஜீயர், திருநகரிப்பிள்ளை, காராஞ்ஜி

ஸோமயாஜியார், அலங்காரவேங்கடவர், நம்பிகருந்தேவர், சிறுப்பள்ளிதேவராஜபட்டர், பிள்ளையுறைந்தையுடையார், திருக்குருகைப்பிரான்பிள்ளான், பெரியகோயில்வள்ளலார், திருக்கண்ணபுரத்தரையர், ஆசூரிப்பெருமாள், முனிப்பெருமாள், அம்மங்கிப்பெருமாள், மாருதிப்பெரியாண்டான், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான், ஸோமாசியாண்டான், ஜீயராண்டான், ஈசுவராண்டான், ஈயுண்ணிப்பிள்ளையாண்டான், பெரியாண்டான், சிறியாண்டான், குரிஞ்சிபுரச்சிறியாண்டான் அம்மங்கியாண்டான், ஆளவந்தாராண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானர், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி, மழுவூர்நம்பி, திருக்குறுங்குடிநம்பி, குரவநம்பி, முடும்பைநம்பி, வடுகநம்பி, வங்கிப்புரத்துநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி, அம்மங்கியம்மாள், பரித்திக்கொல்லையம்மாள், உக்கலம்மாள், சொட்டையம்மாள், முடும்பையம்மாள், கொமாண்டூர்ப்பிள்ளை, கொமாண்டூர் இளையவில்லி, கிடாம்பிப்பெருமாள், ஆர்க்காட்டுப்பிள்ளான் என்பவர்களாம். இவர்களுள் ஸந்யாஸிகள் நால்வரும் க்ருஹஸ்தர் எழுபதின்மருமாவார்கள். ஸந்யாஸிகள் வம்சபரம்பரையின்றி ஜ்ஞாநபரம்பரையும், ஸ்தானபரம்பரையுமாக இருந்து வரவேண்டுமென்று நியமித்தருளினர். அப்படியே இப்பொழுதும் அநுஷ்டானத்திலிருந்து வருகிறது. ஸ்ரீபாஷ்யகாரரின் அபராவதாரமான மணவாளமாமுநிகள், ஆசார்யபதம் வஹிப்பதற்கு வானமாமலைஜீயர், திருவேங்கடஜீயர், பட்டர்பிரான்ஜீயர், கந்தாடையண்ணன், எறும்பியப்பா, அப்பிள்ளை, பிள்ளார், பிரதிவாதிபயங்கரம் அண்ணன் என்ற எண்மரை நியமித்தருளினர். இவர்கள் அஷ்டதிக்கஜங்களென்று வழங்கப்படுவார்கள். இவர்களுள் ஸந்யாஸிகள் மூவரும், க்ரஹஸ்தர்கள் ஐவருமாவார்கள். இம்முறை வகுப்பும் உடையவர்திருவுள்ளத்தை அடியொட்டியதே.

(தொடரும்.)

வடகரையிலுள்ளது. இசைக்கள்வனூர் - கீர்த்தியையுடைய திருக்கள்வனூர்; இது தொண்டைநாட்டுள்ளது. வெளியங்குடி-திருவெள்ளியங்குடி; இது சோழநாட்டுள் காவிரியின் வடகரையிலுள்ளது. புருடவுத்தமம்-திருவண்புருடோத்தமம். ஊரகம்-தொண்டைநாட்டுள்ளது. பரமேச்சுரம்-பரமேச்சுரவிண்ணகரம். பரிசாரம்-மலைநாட்டுள்ள திருவண்பரிசாரம். சேறை-சோழநாட்டுக் காவிரியின் றென்கரையிலுள்ள திருச்சேறை. நான்பளி-பார்த்தன்பள்ளி. பார்த்தன்பள்ளி, முட்டம் என்பன சோழநாட்டி லுள்ளன. பரவுதல்-துதித்தல். அநுசருத்தமர் மூவரும்-(இராமனுக்குத்) தம்பிகளாகிய சிறந்த மூவரும். சனகனுக்கிளையானருண்மங்கையர்-சனகனுக்குத் தம்பியாகிய குசத்துவசன் பெற்ற பெண்களாகிய. கனல் கரியாக-அக்நிசாக்ஷியாக. அடைவினிற்றவிராது-முறைதவறாமல். இளையாரோடு-தம்பிமார்களான பரதன் முதலியவர்களோடு. அயன்மைந்தனை-வசிட்டனை. வரிசை-பெருமை. காதிதன்மைந்தனை-விசுவாமித்திரனை. இறைவனை-அரசனாகிய தசரதனை. பெறுதாயரை-பெற்ற தாய்மார்களான கோசலை, கைகேயி, சுமித்திரை என்பவர்களை. வந்தனைபுரியா-வணங்கி. வானகதுந்துபி-தேவதுந்துபி. துந்துபி-ஒரு வாத்தியவிசேடம். அதிர-முழங்க. ஆசி-வாழ்த்து. இலகு-விளங்குகின்ற. பொற்றிருமாது-அழகிய இலக்குமி தேவியாகிய சீதைப்பிராட்டி.]

51. கொடுப்பரோவஞ்சமேகொண்டு
துரப்பரோவென்செய்வோமென்று
குறிப்பரோதங்கள்பால்வந்து மிடிகூறிற்
கொதிப்பரோவஞ்சியேமுந்த
வொளிப்பரோநஞ்சுவாளங்கை
குறைப்பரோவம்பராய்விஞ்சு கயவோர்தா
மடிப்பரோவென்றுநீள்சிந்தை
யிளைக்கவேசென்றகால்பிந்த
அடுத்தநாவின்கணீரின்றி [1]யளியேன்யான்
அருட்செய்வாய்கொண்டலேயென்கை
[2]விடுத்துநீயண்டமேழுண்ட
[3]வதிப்ரதாபங்களோர்கிஞ்சி துணர்வேனே
தடக்கைபாலன்பொடே'மென்கை
பிடித்தநாண்முந்தவேவந்து
தனித்துவாழ்கின்றபோதின்கண் மகிழ்சீதை

1. வறியேன்யான். 2. யயர்த்து. 3. வதிப்ரதாபங்களேகிஞ்சி. 4. யங்கை

தனத்துமோகங்கொளாநின்று
கயற்கணேயென்கணேயண்டர்
தவத்தினால்வந்துபார்கொண்ட — சனகேசன்

மடக்கொடீசெம்பொனேயென்ற
னுயிர்க்குள்வாழ்வஞ்சியேயுன்றன்
மருட்டராவின்பமேயன்றி — யினிமேல்யான்

மதித்துமேகண்டுமால்கொண்டு
[1]புறத்துளார்மங்கைமார்கொங்கை
மனத்தினானுந்தொடேனென்ற — பெருமாளே.

[குறிப்பு:-துரப்பரோ-ஓட்டுவார்களோ. மிடி - வறுமை. கொதிப்பரோ-கோபிப்பார்களோ. அஞ்சியே முந்த வொளிப்பரோ-கொடுப்பதற்குப் பயந்து முதலில் ஒளித்துக் கொள்வார்களோ. நஞ்சுவாளங்கை குறைப்பரோ-விஷம் பூசிய வாளால், இடு என்று தாழ நீட்டிய கைகளை வெட்டிவிடுவார்களோ. வம்பராய் விஞ்சு கயவோர்-வீணராய் மிக்க கீழ்மக்கள். சிந்தை-மனம். அளியேன் யான்-நான் கருணைசெய்யத் தக்கவன். கொண்டலே-மேகம் போல்பவனே. என்கை-என்று கீழ்மக்களைப் புகழ்வதை. அண்டமேழுண்ட அதிப்ரதாபம்-ஏழுலகங்களையும் உண்டு (வயிற்றிலடக்கிய) மிக்கவீரம். ஓர் கிஞ்சிது-ஒரு சிறிதும். தடக்கையால்-பெரிய கையினால். 'கயற்கணே' என்பது முதல் 'தொடேன்' என்பதுவரை (பிராட்டியை நோக்கிய) இராமன் கூற்று. அண்டர்-தேவர். வஞ்சி-பெண். மருள்தரா இன்பம்-மயக்கந்தராத இன்பம். மால் மயக்கம். புறத்துளார் மங்கைமார் கொங்கை-வெளியிலுள்ளவர்களான இதர ஸ்திரீ ஜனங்களுடைய தனத்தை.]

55. அங்காதரவொடு நினையவுமோகச்
சிந்தாகுலமது தெளியவுமாதர்க்
கன்பாயுருகுத லொழியவுஞானப் — படையாலே

அஞ்சாதுறுபகை களையவும்வேரிப்
பைந்தார்கொடுநனி பணியவும்வானத்
தண்டாதிபர்தொழு திருவடிமீதிற் — றலைசேரா

இங்காரெதிரென மகிழவு[2]ஞாலத்
துன்பேரிசைசெவி பருகவு[2]மேலைக்
கென்பாருறவுக ணெகிழவும்யானிப் — படிமீதே

---

1. புறத்துமாமங்கைமார்.
2. ஞானத். 2. மேலைத்தென்பா.

என்றேபெறுவது பொழுதுகள்வீணிற்
சென்றேகழியுமுன் மதியுபதேசித்
திந்தாபிடிபர கதியெனவாழ்வித் தருள்வாயே

சங்கார்மிதிலையி னுபர்கலியாணச்
சிங்காரமுமதன் மகிமையுமாண்மைச்
சந்தோடமுமினி மையுமுளவாகச் சனகேசன்

றன்பால்விடைகொடு கரிபரிதேர்முற்
றுந்தானைகள்வர முரசொலிவீறத்
தண்சாமரையிரு புடையினும்வீசத் தமர்சூழக்

கொங்கார்பரிமள துளவணிமாலைத்
திண்டோள்[1]பொலிவெழ மரகதமேருக்
குன்றுமெனவருள் வடிவெனவீரச் சிலையோடே

கொந்தார்புரிகுழல் வரிவிழிநீலச்
சந்த்ரானனசன கிளை[2]யொருதேரிற்
கொண்டேவருமழ கியமணவாளப் பெருமாளே.

[குறிப்பு:-அங்கு-அசை. ஆதரவொடு நினையவும்-விருப்பத்தோடு (உன்னுடைய திருவடிகளை) நினையவும். மோகச் சிந்தாகுலம்-விருப்பத்தோடுகூடிய மனக்கலக்கம். சிந்தாகுலமது என்பதில் ஈற்றில்நின்ற அது பகுதிப்பொருள் விகுதி. ஞானப்படை-ஞானமாகியவாள். களைதல்-நீக்குதல். வேரிப்பைந்தார் கொடுநனி பணியவும்-வாசனையுள்ள பசியமாலைகளைக்கொண்டு (சாத்தி) மிகவும் வணங்கவும். அண்டாதிபர்தொழு திருவடிமீதில்-தேவர்தலைவரால் வணங்கப்படும் திருவடிகளில். தலைசேரா-வணங்கி. இங்கா ரெதிரொன மகிழவும்-இவ்விடத்து என்னையொப்பார் எவர் என்று சந்தோஷிக்கவும். ஞாலத்து-பூமியில். உன் பேரிசை-உன்னுடைய பெரிய கீர்த்தியை. செவி பருகவும்-காதாற் கேட்கவும். மேலைக்கென்பா ருறவுக ணெகிழவும்-(யாம் இப்பொழுது இளையம் ஆதலால்) வயது முதிர்ந்தபின் பகவத் குணானுபவங்களிலே ஈடுபடுவேம் என்று சொல்லுவோரது ஸ்நேகம் விலகவும். இப் படிமீது யான் பெறுவது என்று-இந்தப் பூமியிலே யான் அடையுங்காலம் என்று. பரகதி-மேலானநிலை. ஆண்மைச் சந்தோடம்-வில்லிறுத்த ஆண்மையினால் உண்டான மகிழ்ச்சி. கரி-யானை. பரி-குதிரை. தானை-காலாட்படை. முரசொலி வீற - பேரிகைகளின் முழக்கம் மிக. தமர்-சுற்றத்தார். கொங்கார் பரிமள துளவணிமாலைத் திண்டோள் பொலிவெழ-தேன்பொருந்திய வாசனையுள்ள துழாய்மாலை யணிந்த ஒழுங்கான வலியதோள்கள் விளங்க. கொந்தார் புரிகுழல் நீலவரிவிழிச் சந்த்ரா

1. பொலிதர. 2. மகிழ்வாகிக்.

னன சனகியை-பூக்கொத்துக்கள் பொருந்திய பின்னிய கூந்தலையும் நீலமணி, போன்ற செவ்வரி கருவரி பரந்த கண்களையும், சந்த்ரன்போன்ற முகத்தையு முடைய சீதைப்பிராட்டியை.]

56. இருகையோதொழாதுபற்றி
மலரெடாதிடாதுசித்த
மிளகுறாதுநாவுமிக்க திருநாமம்

இசையோடேசொலாதுகெட்ட
தலைசெயாதுதாள்வணக்க
மினியநீருகாவிணைக்கண் இதனாலே

யுருகுநேயமேவுபத்த
ரருகுசார்கிலேனெவர்க்கு
முரியனாகிலேனெடுத்த வுடல்பாவம்

ஒருவனானநீக்ருபைக்கண்
உதவுபார்வையால்[1]விலக்கி
யுறுதிகூறிவாழவைப்ப தொருநாளே

அரசனாவியேபதைக்க
உலகமேழுமேப்ரமிக்க
அடிபொருதராநெளிக்க முடிகர்வந்

தணுகிநானலாதுமற்று
மெவனடாவிராமபத்ர
னவனேமோதுவேனெனத்த னதிருபம்

பரிதிகோடிபோலெறிக்க
மகுடவேணிதாழருத்ர
பரமயோகிப்போலதட்டி ரதமேறிப்

பழையசாப[2]மேவணக்கி
யறிவையோவெனாவெதிர்த்த
பரசுராமன்விறழித்த பெருமாளே.

---

1. விளக்கி. 2. நீவணக்க.

[குறிப்பு:- இடாது-அருச்சனைசெய்யாது. சித்தம்-மனம். இளகுருது-உருகாது. தாள்-திருவடிகளில். இணைக்கண் இனிய நீருகா-இரண்டுகண்களும் ஆனந்த பார்ஷ்பத்தைச் சிந்தா. நேயம்-அன்பு. பத்தர்-அடியார். உடல்பாவம்-சரீரத்தையும் அதனாற் றேடிக்கொண்ட தீவினையையும். ஒருவனுன நீ-ஒப்பாரை மிக்காரை இலையாய நீ. அரசன்-தயாதன். ஆவி-உயிர். பதைக்க-நடுங்க ப்ரமிக்க-திகைக்க. அடிபொறுது அராநெளிக்க-பரசுராமன் கோபத்தோடு தூக்கிவைத்து நடந்து செல்லும்போது அவனது பாதத்தைத் தாங்கமுடியாமல் ஆதிசேஷனும் நெளிக்க. முடுகாவந்து-விரைந்துவந்து. அணுகி-கிட்ட நெருங்கி. 'நானலாது' என்பதுமுதல்; 'பழைய சாபமே வணக்கி யறிவையோ" என்பதுவரை பரசுராமன்கூற்று. அதிரூபம்-மிக்க வடிவம். பரிதிகோடிபோலெறிக்க-கோடிசூரிய ப்ரகாசம்போல் ப்ரகாசிக்க. மகுடவேணிதாழ-சடைமகுடமானது அவிழ்ந்து தொங்க. ருத்ரபாமயோகிபோலதட்டி-பரம யோகியாகிய ருத்திரனைப்போலக் கர்ஜித்து. சாபம்-வில். வணக்குதல்-வளைத்தல். வீறு-வலி.]

57\. இருவினையைமுட்டிமயங்கு
மதியையதின்மாட்டியுலைந்த
வெனைநெடியகோட்டிகள்கண்டு நரகூடே

இறுதிபறவீழ்த்திபிறந்து
பிறவியெழுகாட்டினுள்வெம்ப
விவளாவினில்வேற்றுமைகண்ட தமையாதோ

அருமறைகடேற்றுமிகுந்த
திருவடிகள்காட்டியமுங்கு
மவலமுழுதோட்டியனந்த வெகுமாயத்

தகிலவிளையாட்டொடுமுந்த
விதுவுமொருகூத்துநினைந்துன்
அடியரொடுகூட்டிவைகுந்த மருள்வாயே

பராசுதரனீட்டிவழங்கு
நெடியசிலைகோட்டிமுனிந்து
பகழியதுபூட்டியவன்செய் தவம்வாரிப்

பரிபவமதாக்கியபின்பு
விடையருளிநோக்கியதந்தை
பழையவிடர்நீக்கிடடந்து வழியூடே

திருவடிகள்போற்றிவணங்கு
பரதனையும்வாழ்த்தியுகந்து
செயமருவுபாட்டனிருந்த [1]நகர்காணத்

திரள்புயபராக்ரமதுங்க
விளவலொடுபோக்கிவிளங்கு
திருவொடுமயோத்திபுகுந்த பெருமாளே.

[குறிப்பு:-இருவினை-நல்வினை தீவினை. மூட்டி-உண்டாக்கி. மதியை-அறிவை. அதின்மாட்டி-இந் நல்வினை தீவினைகளிலே சேர்ப்பித்து- உலைந்த-நிலைகுந்த. எனை-என்னை. நெடிய-பெரிய. கோட்டிகள்கண்டு-பைத்தியச் செய்கை யுடையவனுகச்செய்து. நரகூடு-நரகில். இறுதியறவீழ்த்தி-முடிவறக் கிடத்தி. இறந்து-செத்து. பிறவியெழு காட்டினுள்-எழுபிறப்பாகிய காட்டினில். வெம்ப-வாடும்படி. மறைகள்-வேதங்களால். தேற்றும் மிகுந்த திருவடிகள்-(உபாயமாக)நிச்சயித்துச் சொல்லப்பட்ட மிக்க பெருமையுள்ள திருவடிகளை. அழுங்கும் அவலம்-வருந்திய மனக்கவலை. அநந்த வெகுமாயத்தகில விளையாட்டொடு-கணக்கற்ற மிக்க மாயத்தோடுகூடிய ப்ரபஞ்ச லீலையோடு. முந்த-முன்னே. இதுவும் ஒரு கூத்து நினைந்து-என்னை ரக்ஷிக்கும் இதனையும் ஒரு விளையாட்டாகக் கருதி. பரசுதரன்-பரசுராமன். வழங்கும்-கொடுத்த. நெடிய சிலை-நீண்ட வில்லை. கோட்டி-வளைத்து. முனிந்து-கோபித்து. பகழியதுபூட்டி-அம்பையேறிட்டு, பரிபவமதாக்கியபின்பு-பரசுராமனை அவமானப் படுத்தியபின். விடையருளி-அவனுக்குப் போக அனுமதிதந்து. தந்தை-தகப்பனாகிய தசரதனுடைய. பழைய இடர்நீக்கி-நெடுங்காலம் பரசுராமனாலடைந்த துன்பத்தை நீக்கி. புயம்-தோள். பராக்ரமம்-வீரம். துங்கம்-உயர்வு. இளவல்-சத்துருக்னன். போக்கி-போகச்செய்து. திரு-சீதைப்பிராட்டி.]

58. எறிபடையெடுத்துமோகர
மகிஷமதுகைத்துமேலிடு
மெரியெனவிழித்துவீசிய கயிறோடே

---

1. நகரான.

யிடியெனமுழக்கியேயெதிர்
கறுவுறுகருத்தகாலனை
னிறுதிநிலைபற்றியேவரு மொருபோது

முறுகுகனலொத்ததாடகை
வெருவுறவளைத்தசாபமு
முனிசொலவிடுத்தபாணமு மிருதோளு

முதுகிடைபிணித்ததூணியும்
அழகியபசுத்தமேனியு
முறுவலுமுகப்ரசாதமும் மறவேனே

அறநெறிவிளக்குகோசலை
மருமகள்வடித்தவேதியள்
அயில்விழிபிடித்தகாதினள் இருபோதும்

அருமறைமணக்குமேனியள்
வரகமலமுற்றபாணியள்
அமுதூறுசிவத்தவாயினள் அருண்மாறுப்

பொறையுலகுபெற்றபூரணி
பிரமனையளித்தநாயகி
புணரியினுதித்தகாரிகை மறுநாடாப்

புதுமதிமுகத்தள்சானகி
முகுளிதவிசித்ரபூஷண
புளகிதமுலைக்குண்மூழ்கிய பெருமாளே.

[குறிப்பு:-படை-ஆயுதம். மோர்கரமகிஷ மதுகைத்து-உக்கிரமான எருமைக் கடாவைச் செலுத்தி. எரியென-அக்கினியைப்போல. முழக்கி-சப்தித்து. எதிர் கறுவுறு-எதிர்த்துக்கோபித்துவருகிற. காலன்-எமன். இறுதிநிலை-அந்திமகாலம் முறுகுகனல் ஒத்த-கடிய நெருப்பையொத்த. வெருவுற-பயப்படும்படி. முது

வலும்-புன்சிரிப்பும். முகப்ரசாதமும்-முகத்திலுள்ள கருணையும். வடித்தவோதியள்-சிக்கெடுத்து அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடையாள். அயில்விழிபிடித்த காதினள்-காதளவோடிய வேல்போன்ற விழியினையுடையாள். இருபோதும் அருமறை மணக்குமேனியள்-அந்திசந்திகளில் அந்தணர்சொல்லும் வேதமந்த்ரங்களாற் ப்ரதிபாதிக்கப்பட்டவள். வரகமலமுற்ற பாணியள்-சிறந்த தாமரைப் பூவைக் கையின்கண் உடையவள். சீதாபிராட்டி இலக்குமியின் அம்சமாதலின் 'வரகமலமுற்ற பாணியள்' என்றார். புணரி-திருப்பாற்கடல். மறுநாடாப் புது மதி முகத்தள்-களங்கமடையாத புதிய மதிபோலு முகத்தையுடையவள். முகுளித விசித்ர பூஷண புளகித முலை-தாமரை மொட்டுப்போன்ற அழகிய ஆபரணங்களை யணிந்த (சந்தோஷத்தால்) மயிர் சிலிர்த்திருக்கின்ற தனம்.]

பாலகாண்டம் முற்றிற்று.